பாஞ்சாலங்குறிச்சி

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு கல்வி அமைச்சரவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) திருநெல்வேலி மாவட்ட பாஞ்சாலங்குறிச்சியை வரலாற்று இடமாக்க செயற்குறிப்பு ஏதேனும் உண்டா ?

(இ) ஏதேனும் ஞாபகச் சின்னம் அங்கு வைக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : (அ) and (இ) : ஆம். பாஞ்சாலங்குறிச்சியிலுள்ள வீரபாண்டியக் கட்டபொம்மன் கோட்டையில் இடிந்த சின்னங்களைப் பாதுகாக்க ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவரவர்களே, அந்த இடிந்துபோன சின்னங்கள் உள்ள இடத்தை, கட்டபொம்மனின் வாரிசுதாரர்கள் தங்களிடம் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு இருப்பதாகத் தெரிகிறது. அதுபற்றி அவர்களிடமிருந்து அரசாங்கத்திற்கு ஏதாவது கோரிக்கை வந்ததா ? என்ன முடிவு எடுக்கப்பட்டது ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அது பற்றிய விவரக்குறிப்பு இல்லை. கட்டபொம்மன் இடமென்று ஒரு மண்மேடு இருக்கிறது. அவனுடைய அரண்மனை என்பதற்கான அடித்தளங்கள் காணப்படுகின்றன. அதைப் பாதுகாக்க முடிவு செய்யப்பட்டு 26—9—1967ல் ரூபாய் 8,500 ஒதுக்கப்பட்டு, அதை பாதுகாக்கும் பொருளாக அரசாங்கம் ஏற்று நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது.

Hosur High School

* 116. *Q.*—THIRU N.R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(*a*) the reason for students' agitation in Hosur High School ;

(*b*) the loss sustained by the people as a result thereof ;

(*c*) whether the students were injured ; and

(*d*) the steps taken by the Government.

ஹோசூர் உயர்நிலைப் பள்ளி

திரு என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) ஹோசூர் உயர்நிலைப் பள்ளியில் மாணவர்கள் கிளர்ச்சிக்குக் காரணம் என்ன ?

(இ) அதனுல் பொது மக்களுக்கு ஏற்பட்ட சேதம் எவ்வளவு ?

(உ) மாணவர்களுக்கு காயம் ஏற்பட்டதா ?

(எ) சர்க்கார் எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : (அ) ஹோசூர், அரசாங்க (வாரிய) உயர்நிலைப்பள்ளியில் பயிலும் தமிழ் மாணவர்கள் தெலுங்கு துதிப்பாடலுடன் கூட தமிழ் துதிப்பாடலும் சேர்க்கப்பட வேண்டுமென விரும்பினர். இதனைத் தெலுங்கு மாணவர்கள் எதிர்த்தனர்.

(இ) and (உ) : கல்லடி காரணமாக 14 மாணவர்களுக்கும் காவல் துறை தலைமைக் காவலருக்கும் வெளியாள் ஒருவருக்கும் சிறு காயங்கள் ஏற்பட்டன. காவல் நிலையம், அஞ்சல் நிலையம், வட்ட அலுவலகம், ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முதலியவற்றில் உள்ள தமிழ்ப் பெயர்ப் பலகைகள் உடைக்கப்பட்டன. பொது மக்களின் சொத்துக்களுக்கு எச்சேதமுமில்லை.

(எ) அனைவருக்கும் உகந்த முறையில் இச்சிக்கலுக்குத் தீர்வு காண குடிமக்கள் குழு ஒன்று அமைக்கப்பட்டது. அப்பகுதியைச் சேர்ந்த சட்ட மன்றப் பேரவை உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், வழக்குரைஞர்கள், மற்றும் ஹோசூரைச் சேர்ந்த பெரிய மனிதர்கள் சிலர், உள்ளூர் உயர்நிலைப்பள்ளிகளின தலைமை ஆசிரியர்கள் ஆகியோர் இது குறித்து விவாதித்தனர். தெலுங்கு துதிப்பாடலுடன் தமிழ்த் துதிப்பாடலை யும் சேர்க்க அவர்கள் முடிவு செய்தனர். இது 28—8—1967 முதற் கொண்டு செயலில் இருந்து வருகிறது.

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவரவர்களே, அங்கே வழக்கமாக என்ன மொழியில் துதிப்பாடலகள் பாடப்பட்டு வந்தது ? திடீரென்று சென்ற ஆண்டில் அதை மாற்றக் காரணமென்ன ? நான் கேள்விப்பட்ட வரையில் அங்கே தெலுங்கு போன்ற மொழிகளையே பேசக்கூடாது, பேசினால் இந்த ராஜ்யத்தை விட்டே வெளியில் போய்விட வேண்டும் என்றெல்லாம் அங்கு சொல்லப்பட்டதாகக் கேள்விப்பட்டேன். அது உண்மையா ?

மாண்மிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அங்கே பெரும்பாலான மாணவர்கள் தெலுங்கு மாணவர்களாக இருக்கிறார்கள். மூன்றில் ஒரு பகுதியினர் தமிழ் மாணவர்களாகும். அங்கு தொடர்ந்து தெலுங்கு மொழியில்தான் பாடப்பட்டு வந்தது. நீண்ட நாட்களாக தமிழிலும் பாடவேண்டுமென்று தமிழ் மாணவர்கள் கோரிக்கை வைத்திருந்தும் அது ஏற்கப்படவில்லை. தமிழில் பாடவேண்டுமென்பதற்காக முயற்சிகள்எடுத்துக் கொள்ளப்பட்ட நேரத்தில், தெலுங்கு மாணவர்களுக்கும், தமிழ் மாணவர்களுக்கும் இடையே 25-ம் தேதி கலகம் ஏற்பட்டது. உடனடியாக மாவட்ட கலெக்டர் அவர்களும், எஸ்.பி.யும் சென்று எல்லோரையும் கூட்டி வைத்து சுமுகமாக ஒரு ஏற்பாடு செய்து, தெலுங்கில் பாடுவது என்றும், பின்னர் தமிழில் துதிப்பாடல் பாடுவது என்றும் எல்லோரும் ஒத்துக்கொள்வதற்கான முடிவு எடுக்கப்பட்டது. அதைத் தவிர வேறு ஏதேனும் உறுப்பினர் அவர்கள் கூறுவது போன்ற நிலைமையிருந்தால் அது குறித்து தனியாக ஆராயப்படும். இப்போது கொடுக்கப்பட்டிருக்கும் விவரம் இவ்வளவுதான்.

Pre-Engineering and Pre-Medical Courses

* 117 *Q.*—THIRU **N. R. THIAGARAJAN** : Will the **Hon.** the Minister for Education and Industries be pleased to state—

(*a*) the number of candidates from (1) Medical; and (2) Engineering Colleges who have failed continuously in Pre-Medical and Pre-Engineering Courses during the last three years; and

(*b*) whether they are permitted to appear for the examination even though they fail any number of times ?

பிரி மெடிக்கல் பிரி இன்ஜினியரிங் வகுப்புகள்

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) (1) பொறியியற் கல்லூரி, (2) வைத்தியக் கல்லூரிகளில் பிரி மெடிக்கல், பிரி இன்ஜினியரிங் வகுப்பில் தொடர்ந்து கடந்த மூன்று ஆண்டுகளாக தவறியவர்கள் எத்தனை பேர் ?

(இ) எத்தனை தடவை தேர்வில் தவறினாலும் தொடர்ந்து எழுத அனுமதிக்கப்படுகிறதா ?